# பல்லவர் காலச் செப்பேடுகளில் நிலதானம்

# Land Grant in Pallava Copper Plates

***முனைவர் த. கண்ணகி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
த.உ.க. கலைக் கல்லூரி, தஞ்சாவூர், இந்தியா

**Dr. T. Kannagi**
*Assistant Professor, Department of Tamil*
*T.U.K. Arts College, Tanjore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இந்திய வரலாற்றில் காலத்தைக் காட்டும் கண்ணாடிகள். செப்பேடுகள் நிலக்கொடையையும், தானங்களையும், கோயில் திருப்பணிகளையும் குறிப்பிடுவதாக இருந்தாலும் அரசர்களின் வம்சாவளி அவர்கள் மேற்கொண்ட போர்களைப் பற்றிய விபரங்களும் காணப்படுகின்றன. சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் தழைத்ததும் பல்லவர் காலம் தான். அவ்வகையில் அதிக செப்பேடுகளை வெளியிட்ட பெருமைக்குரியவர்கள் பல்லவர்கள் என்றால் மிகையாகாது. அவர்கள் விட்டுச்சென்ற செப்பேடுகள் வழியாக அறியப்படும் பல்வேறுபட்ட தானங்களைப் பற்றி ஆராய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

***ஆய்வு நோக்கம்:***

*பல்லவர்கள் வரலாறு, தானம் - இலக்கியச் சான்றுகள், செப்பேடுகள்.*

## Abstract

*Inscriptions and copper plates are mirrors of Indian history. Though the copper plates refer to grants of land, grants and temple renovations, there are also references to the dynastic and wars of kings. It was during the Pallava period that Saiva and Vaishnava devotional literature flourished. It is no exaggeration to say that the Pallavas are credited with the largest number of copper plates of this kind. The purpose of this study is to study the various donations known from the copper plates left by them.*

***Keywords:***

*Pallava History, Danam – Literary Evidences, Copper Plates.*

**Citation**

Kannagi, T. "Land Grant in Pallava Copper Plates." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 73–76.

**முன்னுரை**

*பல்லவர்களின் பள்ளன்கோயில் ஹொஸக்கோட்டை செப்பேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலதானங்கள் மட்டுமே பிராமணர் அல்லாதவர்களுக்கு வழங்கப்பட்டவை. மற்ற அனைத்தும் பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலதானம் என்றாலும் பல முக்கிய சரித்திரச் செய்திகள் சாசனங்களில் சொல்லப்பட்டுள்ளன. பல்லவர் காலத்தில் விளங்கிய நில அளவைகள் குழி, வேலி என்பன. பல்லவ மன்னர்கள் வழங்கிய தானங்களுக்கு வரலாற்றாதாரமாக ஆவணமாக இருப்பது செப்பேடுகளாகும். அதில் காணலாகும் பல்வேறு தானங்களை எடுத்துரைக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.*

**பல்லவர்களின் வரலாறு**

*தமிழக வரலாற்றில் மூவேந்தர்களுக்குப் பின் மிக அதிக காலம் ஆண்ட புகழ்பெற்ற நான்காவது அரச வம்சம் பல்லவ அரச வம்சம் ஆகும். கி.பி.3-ம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ம் நூற்றாண்டு வரை காஞ்சிபுரத்தைத் தலைநாகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் பல்லவர்களுடைய வரலாற்றை அறியப் போதுமான இலக்கியச் சான்றுகள் இல்லாத நிலையில் பல்லவர்களின் வம்சாவளி, ஆட்சி முறை, அரசியலமைப்பு, வரிவிதிப்பு முறைகள் பற்றிய செய்திகளை கல்வெட்டுகள், செப்பேடுகள் மட்டுமே பல்லவர் வரலாற்றை விரிவாக எடுத்துரைக்கின்றன.*

**தானம் - இலக்கியச் சான்றுகள்**

*தானம் என்ற சொல் திருக்குறளில் இரண்டு இடத்திலும், சிலம்பில் ஓர் இடத்திலும் கேளாமல் தருவது என்ற பொருளில் ஆளப்பட்டிருக்கிறது.*

***தானம் தவம் இரண்டும் தங்காவியனுலகம்***
***வானம் வழங்காது எனின்***

*வான்சிறப்பில் இடம்பெற்றுள்ள ஒன்பதாவது குறளில் வானம் வழங்காது எனின் தானம் தவம் ஆகிய இரண்டும் இந்த உலகில் தங்காது என்ற பொருளிலும்,*

***மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு***
***தானம் செய்வாரின் தலை***

*என்ற குறளில் மனத்தொடு உண்மை பேசினால் அது தவம் செய்பவர்களைக் காட்டிலும் தானம் செய்பவர்களைக் காட்டிலும் தலையாயது ஆகும்.*

***கண்ணகி தாதை, கடவுள் கோலத்து***
***ஆள் நலம் பெருந்தவத்து ஆசீவகர்முன்***
***புண்ணிதானம் புரிந்து அறங் கொள்ளவும் (இனியவை நாற்பது பாடல் - 27)***

*என்ற இனியவை நாற்பது பாடல் வரியில் தானம் கொடுப்பவனின் ஆண்மை மிக இனிது. மானம் இழந்து வாழாமை இனிது என்று தானத்தின் சிறப்பு பற்றி கூறப்பட்டுள்ளவையை காணமுடிகிறது. எனவே, மழை என்ற ஒன்று இருந்தால் உலகில் வளம் ஏற்படும் அது இருந்தால் தானம் என்பது உலகில் தங்கும் என்று தானத்தின் சிறப்பு பற்றி இலக்கியங்களில் காணமுடிகிறது.*

**செப்பேடு**

*செப்பேடு என்பவை பழங்காலத்தில் மன்னர்கள் கோயில் தானங்கள், வம்சாவழி, போர்க் குறிப்புகள் போன்ற நிகழ்வுகளைப் பதிந்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட உலோகத்தகடு*

*ஆகும். இவை, தற்காலத்தில் பழங்காலத்தைப் பற்றி அறியும் தொல்லியல் சான்றுகளாக இருந்து வருகின்றன. இயற்கையாக ஓலைச் சுவடிகள் அழிவது போலச் செப்பேடுகள் அழிவது இல்லை. அந்த வகையில் பல்லவர்களின் பல்வேறுபட்ட தானங்களைப் பற்றி இவ்வாய்வில் பின்வருமாறு காண்போம்.*

**மூன்றாம் விஜயஸ்கந்தவர்மனின் ஓங்கோடு செப்பேடு (கி.பி.5-ம் நூற்றாண்டு)**

*சாத்வீக தானம் என்றால் என்ன என்பதை இச்செப்பேடு விளக்குகிறது. குண்டூர் மாவட்டத்தில் பாபட்லர் தாலுக்காவிலுள்ள சந்திராவூரு என்னுமிடத்தில் கிராம முன்சீப் குடும்பத்தாரிடம் இரண்டு செப்பேடுகள் நீண்ட காலமாக இருந்தனவாம். இவை, இந்தக் குடும்பத்திற்கு எப்படி வந்தன என்ற விபரம் தெரியவில்லை. 1955-ம் ஆண்டிலிருந்து இந்த இரண்டு செப்பேடுகளும் சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.*

*பல்லவ பேரரசன் விஜயஸ்கந்தவர்மன் தாம்ப்ராபம் என்ற இடத்தில் முகாமில் இருந்தபோது தானம் வழங்கப்பட்டது. இந்த இடம் தற்போது எங்கிருக்கிறது என்று தெரியவில்லை. ஸ்கந்தவர்மனின் 33-வது ஆட்சி ஆண்டின் ஒரு குளிர் காலத்தில் செப்பேடு வழங்கப்பட்டது. காசியப கோத்திரத்தைச் சேர்ந்த வேதமறிந்த பிராமணன் கோலசர்மனுக்கு ஓங்கோடு என்னும் கிராமத்தைத் தானமாக அளித்துள்ளான்.*

*இந்த தானம் சாத்வீக தானமாக அளிக்கப்பட்டது. சாத்வீக தானம் என்பது நீர் தெளிக்காமல் வழங்கப்படுவது என்றும் இந்த தானம் வழங்கியதற்காக அரசன் புகழ், புண்ணியம் போன்ற பிரதிபலன்களை எதிர்பார்க்கவில்லை என்பது இதன்பொருள்.*

**சாருதேவியின் குணபதேயம் செப்பேடு (கி.பி.350)**

*ஓர் அரச குலப்பெண் பிராமணன் அல்லாத ஒரு விவசாயிக்கு வழங்கிய நிலதானம் பற்றிச் சொல்கிறது இச்செப்பேடு குணபதேயம் ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டம் கொண்டக்கூர் தாலுக்காவில் உள்ளது. இந்த சாசனத்தை வழங்கிய சாருதேவி, பல்லவ மன்னர் யுவமகாராஜன் ஸ்ரீ விஜய புத்தவர்மனுடைய மனைவி ஆவாள். மூன்று ஏடுகள் இச்செப்பேட்டில் மொத்தம் 16 வரிகள் உள்ளன. பிராகிருத மொழியிலும் சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்டுள்ளது.*

*அரசனின் மனைவியும் அங்குரன் (என்று முடியும் பெயரைக் கொண்ட) என்பவனின் தாயுமான சாருதேவி ராஜதடாகத்தின் அருகிலுள்ள குடிநீர்க் கிணற்றின் வலதுபுறம் ஆதுகன் என்பவன் பயிரிட்டு வந்த நிலத்தின் நாலு நிவர்த்தனம் பூமியை தாலுரம் (தற்போதைய விஜயவாடா தாலுக்காவில் கிருஷ்ணா நதியின் வடகரையிலுள்ள தாமலுரு) என்ற இடத்தில் கட்டப்பட்டிருக்கும் நாராயணனுடைய கோயிலுக்கு தனது ஆயுட்காலம் கூடுவதற்காக அளித்த செய்தியை இச்செப்பேடு கூறுகிறது.*

*அரசகுல பெண்ணொருத்தியால் வழங்கப்பட்டது என்பதோடு இந்தச் செப்பேட்டிற்கு மற்றொரு முக்கியத்துவமும் இருக்கிறது. நிலதானம் என்றாலே பிராமணர்களுக்கும், கோயில்களுக்கும் தான் என்றிருந்த காலத்தில் சாருதேவி ஒரு சாதாரண விவசாயிக்கு நிலதானத்தை தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.*

**இரண்டாம் நரசிம்மவர்மனின் ரேயூருச் செப்பேடு (கி.பி.702 - 703)**

*சந்திர கிரகணம் ஏற்பட்ட ஆண்டில் பரிகார நிவர்த்தியாக வழங்கப்பட்ட நிலதானம் பற்றிய செய்தியைச் சொல்கிறது இச்செப்பேடு. இந்தச் செப்பேட்டில் ஐந்து இதழ்கள் உள்ளன.*

*இந்தச் செப்பேடு எங்கிருந்து கிடைத்தது எனத் தெரியவில்லை. ஆனால் ஆந்திராவில் காளகஸ்தி அரசர் வீட்டில் இருந்து கண்டெடுக்கப்பட்டு பின்னர் வெளி உலகத்திற்குத் தெரிய வந்தது. தற்போது திருப்பதி வெங்கடேஸ்வரா ஓரியண்டல் இன்ஸ்ட்டியூட்டில் உள்ளது. சமஸ்கிருதத்தில் தெலுங்கு, கன்னட பேச்சு வழக்கில் இச்செப்பேடு எழுதப்பட்டுள்ளது. மொத்தம் 25 வரிகள் உள்ளன.*

*பல்லவ அரசனான இரண்டாம் நரசிம்மவர்மன் தன்னுடைய ஆட்சியின் 12-ம் ஆண்டில் (கி.பி. 702 - 706) இந்தச் செப்பேட்டை வழங்கியுள்ளான். தானம் வழங்கிய நாள் வைசாக மாதத்தின் பௌர்ணமி சந்திர கிரகணம் ஏற்பட்ட நாள். இதுவரை நமக்கு நரசிம்மவர்மனின் கல்வெட்டுச் சாசனங்கள் மட்டுமே கிடைத்திருந்தன. செப்பேட்டுச் சாசனமாக இது மட்டுமே கிடைத்துள்ளது.*

**பார்வை நூல்கள்**


1. *மா. இராசமாணிக்கனார் - பல்லவ வரலாறு - பாரதி பதிப்பகம் சனவரி 2022.*
2. *தமிழக அரசின் தொல்லியல் வலைதளத்தில் செப்பேடுகள்.*
3. *மு. ராஜேந்திரன் - பல்லவர் கால செப்பேடுகள் - அகநி வெளியீடு - வந்தவாசி, 2015.*
4. *வ.த. ராமசுப்பிரமணியம் - சிலப்பதிகாரம் - பூம்புகார் பதிப்பகம் - சென்னை - 08.*


## References


1. Ma. Rasamanikkanar, Pallava Varalaru, Bharathi Publications, January, 2022.
2. Copper plates in the Archaeological Website of the Government of Tamil Nadu.
3. M. Rajendran, Pallava Kala Sepedugal, Akani Publication, Vandavasi, 2015.
4. V.T. Ramasubramaniam, Silappathikaram, Poompuhar Publications, Chennai – 08.